# சமூக ஊடகங்கள் உறவு முறையில் ஏற்படுத்தும் தாக்கம்: கஹடோவிட பிரதேசத்தின் 17 - 25 வயதினரை அடிப்படையாகக் கொண்டது

மதீஹா, MF*, சபானா, MZF, ஹுஸ்னா, MSF & சப்னா MAF

**ஆய்வுச் சுருக்கம்**

சுழன்று கொண்டிருக்கும் இலத்திரனியல் உலகில் சமூக ஊடகங்களின் வளர்ச்சி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இதன் ஆளுகை வயது, பால், தர வேறுபாடின்றி காணப்படுவது நடைமுறை வாழ்க்கையில் தாக்கங்களுக்கு காரணமாக அமைகின்றன. இத்தாக்கங்களானது நேர், மறை தாக்கங்களாகக் காணப்படுகின்றன. இதனடிப்படையில் ஊடகங்களின் வருகை மற்றும் வளர்ச்சியானது உறவு முறையில் பாரிய அளவில் செல்வாக்குச் செலுத்தும் காரணியாக மாறியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. சமூக ஊடகங்களினால் பல்வேறு நலவுகள் உறவுமுறையில் தோன்றியுள்ளன. தொலைவில் உள்ள உறவுகள் அண்மைப்படுத்தப்படல், புதிய உறவுகள் அறிமுகமாதல், பரஸ்பர உதவிகள் பரிமாற்றம் போன்றன குறிப்பிடும் அதேநேரம் அருகில் உள்ள உறவுகள் தூரமாதல், நோய்கள் தோன்றல், செலவு போன்றன அதன் மறைத் தாக்கங்களாகும். இவ்வாய்வின் நோக்கமானது சமூக ஊடகங்கள் உறவுமுறையில் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட முடிவுகளை சமூகத்திற்கு அறியப்படுத்துவதன் மூலம் இந்நிலையை இழிவளவாக்குவதாகும். இவ்வாய்வுக்காக கஹடோவிட பிரதேச மக்கள் தொடர்பாக அளவியல் தரவுகள் பெறப்பட்டன. முதலாம் நிலை தரவு சேகரிப்பு முறையாக நேர்காணல்,அவதானிப்பு, வினாக்கொத்து முறைகள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டாம் நிலை தரவு சேகரிப்பிற்கு புத்தகங்கள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இன்று சமூக ஊடகங்களானது இவ்வயதினர் மத்தியில் பிரிக்க முடியாத ஒரு சக்தியாக மாறியுள்ளது. இதன் மூலம் பல சாதக பாதகங்கள் ஏற்படுவதும் அவதானிக்கத்தக்கது.

**பிரதான சொற்கள்:** சமூக ஊடகம், நேர்-மறை தாக்கங்கள்

To whom correspondence should be addressed: Mudhaiha12@gmail.com

*Department of Social Sciences, South Eastern University of Sri Lanka.